# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2137/39 - 2019 අගෝස්තු මස 20 වැනි අඟහරුවාදා - 2019.08.20

*2137/39 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 37/56* (vi)

**1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் சட்டம்**

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆகிய நான், 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 18/0769/718/043 ஆம் இலக்க அமைச்சரவை முடிவின்படியான அரசாங்கத்தினது அங்கீகாரத்துடன் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும் 1987 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதிய 456/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான முதலாவது அட்டவணையை இக்கட்டளை மூலம் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுகின்றேன்.*

**"முதலாம் அட்டவணை**

கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :

(1) ஒன்றில் தானாகவோ அல்லது அத்தகைய கூட்டு முயற்சி, பகிரங்க தனியார் பங்காண்மை அல்லது அத்தகைய வேறு உடன்படிக்கையைச் செய்துகொள்வதன் மூலம், மருந்தை உற்பத்தி செய்தல், பதனிடுதல், கையிருப்பில் வைத்திருத்தல், பொதியிடுதல் அல்லது மீளப்பொதியிடுதல் ;

(2) துணைநிலைக் கம்பனிகளை உருவாக்குதல் ;

(3) முதலீட்டாளர்களாக வரவுள்ளோருடன் சர்வதேச உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதல் ;

(4) மருந்தை உற்பத்தி செய்வதற்காகவும் பதனிடுவதற்காகவும் தொழில்நுட்ப உதவியை வழங்குதல் ;

(5) வாகடவியற்சார் மற்றும் மருந்தாக்கற்சார் ஆராய்ச்சி மற்றும் மருந்தின் தரப்படுத்தலைப் பொறுப்பேற்றல் ;

(6) கூட்டுத்தாபனம் அல்லது கூட்டு முயற்சி அல்லது அத்தகைய வேறு உடன்படிக்கைகளினால் தயாரிக்கப்பட்ட மருந்துசார் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துதல்.

இக்கட்டளையின் நோக்கத்துக்காக 'மருந்து' என்பது, 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைச் சட்டத்தில் உள்ளவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ராஜித சேனாரத்ன,
சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்.

கொழும்பு,
2019, ஓகத்து 13.

09-59

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.